2 P தினமலர் கோவை
கோயம்புத்தூர் ■ ஞாயிறு ■ நவம்பர் 22, 2015

# தொழில்நுட்ப மாநாடு புரிந்துணர்வு ஒப்பந்தம்

**சூலூர்** ● ஆர்.வி.எஸ்., டெக்னிக்கல் கேம்பஸ் கல்லூரியில், திறன் மேம்பாட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஆர்.வி.எஸ்., டெக்னிக்கல் கேம்பஸ் கல்லூரியுடன், திறன் மேம்பாட்டுக்கான பொறியியல் மற்றும் தொழில்நுட்ப சர்வதேச அமைப்பு (ஐஏஇடிஎஸ்டி.,) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இதன்மூலம், கல்லூரியில் சர்வதேச தொழில்நுட்ப மாநாடுகள், கருத்தரங்குகள், மற்றும் பயிற்சி பட்டறைகள் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தில், கல்லூரி அறக்கட்டளை தலைவர் குப்புசாமி, டெக்னிக்கல் கேம்பஸ் இயக்குனர் ராபின்சன், மானுடவியல் துறைத்தலைவர் பரிமேலழகன் மற்றும் ஐ.ஏ.இ.டி.எஸ்.டி., முதன்மை அதிகாரி சிவபிரசன்ன குமார் கையெழுத்திட்டனர்.

23/11/15



புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஐ.ஏ.இ.டீ.எஸ்.டி. முதன்மை அதிகாரி சிவபிரசன்னகுமார், கல்லூரி முதல்வர் ராபின்சன் ஆகியோர் காண்பித்த போது எடுத்த படம்.

ஐ.ஏ.இ.டீ.எஸ்.டி. அமைப்புடன்

# ஆர்.வி.எஸ். தொழில்நுட்பக்கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்

சூலூர்,நவ.23-

சூலூர் கண்ணம்பாளையத்தில் உள்ள ஆர்.வி.எஸ். தொழில்நுட்ப கல்லூரி, சர்வதேச தொழில்நுட்ப மாநாடு கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகள் நடத்தும் ஐ.ஏ.இ.டீ.எஸ்.டி. என்ற திறன் மேம்பாட்டு பொறியியல் மற்றும் தொழில்நுட்ப அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு ஆர்.வி.எஸ். கல்வி அறக்கட்டளை நிறுவனர் தலைவர் கே.வி.குப்புசாமி தலைமை தாங்கினார். முதல்வர் ராபின்சன், பேராசிரியர் ஆர்.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் ஐ.ஏ.இ.டீ.எஸ்.டி. முதன்மை அதிகாரி சிவபிரசன்னகுமார் பேசும் போது, எங்கள் அமைப்பு இது வரை 12 சர்வதேச தொழில்நுட்ப மாநாடுகள், 100-க்கும் மேற்பட்ட கருத்தரங்குகள் மற்றும் மாணவர் கள், கல்வியாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்களுக்கான பயிற்சி பட்டறைகளை நடத்தி உள்ளது. தற்போது இந்த கல்லூரியிலும் வரும் காலங்களில் மாநாடு மற்றும் கருத்தரங்குகளை நடத்த உள்ளோம். இதன் மூலம் மாணவர்கள் தங்களின் திறன்களை மேம்படுத்தி கொள்ளலாம் என்றார்.

23/11/15